

கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக வளாகத்தில் அரசு மருத்துவக் கல்லூரியில் பயின்ற 144 மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பட்டங்களை வழங்கினார். இதில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் மரு.பி.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழு திட்ட இயக்குநர் முதல் அருண் தம்புராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், மாநகராட்சி கிழக்கு மண்டல குழுத்தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.நிர்மலா, உதவி ஆட்சியர் பிரசாந்த் உள்பட பலர் உள்ளனர்.

பேறுகால விடுப்பிற்குச் சென்று திரும்பிய

## 209 பெண் காவலர்கள் விரும்பிய மாவட்டத்திற்கு மாறுதல்!

### முதலமைச்சருக்கு பெண் காவலர்கள் நன்றி!


சென்னை, ஜுன் 17-

மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்கு திரும்பும் பெண் காவல் ஆளிநர்களுக்கு, அவர்கள் விரும்பும் மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் வழங்கப்படும் என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து,

மொத்தம் 209 பெண் காவல் ஆளிநர்கள், தங்களது பேறுகால விடுப்பிற்குப் பிறகு, குழந்தைகளை கவனித்துக்கொள்ள ஏதுவாக, மற்ற மாநகரம்/மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் கேட்டு விண்ணப்பத்திருந்தனர்.

அதன்படி, 03.06.2025 வரை, பணியிட மாறுதல் கோரி விண்ணப்பித்திருந்த மேற்கண்ட 209 பெண் காவலர்களுக்கும் அவர்கள் விரும்பிய மாநகரம்/மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனிய உள்ளத்திற்கு பெண் காவலர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.



“நான்” என்று சொன்னால்

உதடுகள் ஒட்டுவதில்லை;

" நாம் " என்று சொல்லும்பொழுது

உதடுகள் ஒட்டும்.

...கலைஞர்....

புவனகிரி வட்டம் - பெரியகுமட்டி பட்டாசு ஆலையில்

## வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு ரூ.4 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜுன் 17-

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், பெரியகுமட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், பெரியகுமட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (15.06.2025) காலை சுமார் 11.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் புவனகிரி வட்டம், சின்னக்குமட்டி கிராமம், நடுத்தெருவைச் சேர்ந்த திருமதி.லதா குமாரி (வயது 37) க/பெ.மணிவண்ணன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## கீழடி அகழாய்வு அறிக்கையை உடனே வெளியிடுவீர்!

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. - பிரதமருக்கு வலியுறுத்தல்!

சென்னை, ஜுன் 17-

கீழடி அகழாய்வு அறிக்கையை முழுமையாகவும், எவ்வித திருத்தங்கள் இன்றியும் உடனடியாக வெளியிட வேண்டும் என்று பிரதமர் மோடியை கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தியுள்ளார்.



கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தால் இயக்கப்படும் பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு, கீழடியின் முக்கியத்துவத்தை புதைத்து விடத் தீர்மானித்தது போலத் தோன்றுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கீழடியில் அகழாய்வுப் பணிகள் 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ப்பட்டன. அதற்கு அறிவியல் பூர்வமான ஆய்வுகள் உறுதுணையாக இருந்தன. ஜனவரி 2023ல், தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா 982 பக்கங்கள் கொண்ட விரிவான இறுதி அறிக்கையை சமர்ப்பித்தார். இருப்பினும் இந்த அறிக்கையானது தற்போது வரை பொதுவெளியில் வெளியிடப்படவில்லை. ஏன்? ஏனெனில், அந்த அறிக்கை ஆர்.எஸ்.எஸ். சிந்தாந்தத்தால் இயக்கப்படும் பாஜக தலைமையிலான ஒன்றிய அரசால் புனையப்பட்ட கட்டுக்கதைகளை தோலுரிக்கிறது என்று பி.வில்சன் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசானது கீழடி தொடர்பான அறிவியல் ஆய்வுகளுக்கு நேரம் தேவைப்படுகிறது. ஆகவே தாமதமாகிறது எனத் தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால், அவர்களுக்குப் பிடித்த பண்பாட்டு வரலாற்றை ஒத்துப்போகும் பிற அகழாய்வு தளங்களுக்கு மட்டும் இந்த கால தாமதம் எங்கே போனது? இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனமானது, தாங்கள் பரிந்துரை செய்த திருத்தங்களை தொல்லியல் ஆய்வாளர் செய்திடவில்லை என்கிறது. இருப்பினும், ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தன்னுடைய கண்டுபிடிப்புகளை அறிவியல் பூர்வமான தரவுகளுடன் முன்வைத்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய அரசு உண்மையாகவே கூட்டாட்சி முறையை மதிக்கிறதானால், கீழடி இந்தியாவின் பெருமையாகக் கொண்டாடப்பட வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக, சமஸ்கிருதம் தெற்கே வருவதற்கு முன்பே தமிழ் நிலப்பரப்பில் எழுத்து, தொழில் மற்றும் வளமான கலாச்சாரம் இருந்ததை கீழடி நிரூபிப்பதால், அவர்கள் அதைத் தடுத்து, தாமதப்படுத்தி, கேள்விக்குள்ளாக்குகின்றனர். இந்த தாமதம் தற்செயலானது அல்ல என்று வில்சன் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஒன்றிய அரசின் திட்டமிட்ட தாமதத்தை சரியான வகையில் அடையாளம் காட்டி, அவர்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி, தமிழர் தொன்மையின் மறுக்க முடியாத சான்றாக கீழடி விளங்குவதை பறைசாற்றியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள பி.வில்சன், வரலாறானது சிதைந்த தடயங்களின் வழியாக உண்மைகளை வெளிக்கொணரும்போது, ஒன்றிய அரசு அதை மறைக்க முயற்சிக்கலாம். ஆனால் அந்த உண்மையை நிரந்தரமாக மறைக்க முடியாது. கீழடி எழும் — அதன் மூலம் தமிழர் பெருமையும் எழும். கீழடி அகழ்வாய்வு அறிக்கையை முழுமையாகவும், எவ்வித திருத்தங்கள் இன்றியும் உடனடியாக வெளியிட வேண்டும் என்று பிரதமர் மோடியை கேட்டுக்கொள்வதாகவும் திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

## கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ.2.47 கோடியில் திட்டப் பணிகள்!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, ஜுன் 17-

கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட, பழையபேட்டை காந்திசிலை அருகே சின்ன ஏரி கழிப்பறை புனரமைத்தல், நகராட்சி நடுநிலைப் பள்ளி கலையரங்கம் கட்டுதல், நகர் நல மையம் சுற்றுச் சுவர் கட்டுதல் உள்ளிட்ட, 11 பணிகளுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.83 லட்சம் மற்றும் கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நி லைப் பள்ளிக்கு மேசை நாற்காலி, கிருஷ்ணகிரி டி.பி., சாலை, தர்மராஜா கோயில் தெரு, சீனிவாசா காலனியில் தார் சாலை அமைத்தல் உள்ளிட்ட 8 பணிகளுக்கு, 15வது மானிய நிதியில், ரூ.1.63 கோடி என மொத்தம் ரூ.2.47 கோடி மதிப்பிலான நலத்திட்ட பணிகளை கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., பங்கேற்று, பணிகளை தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசுகையில், இந்தியாவிற்கே வழிகாட்டியாய் திகழும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் மக்கள் பணிகளை செய்வதற்கென்று 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டுள்ளார் மேலும் நகராட்சிக்குட்பட்ட 19 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்திட வேண்டும் என துறை சார்ந்த அலுவலர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றார்.

நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி நகர் மன்ற தலைவர் பரிதா நவாப், நகர் மன்றத் துணை தலைவர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி நகர் மன்ற உறுப்பினர்கள் மீன் ஜெயக்குமார், பாலாஜி, மதன், சுரேஷ்குமார், சீனிவாசன், பரசுராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





கோத்தகிரி கே.பி.எஸ். கல்லூரி மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் கே. எம். ராஜு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் கே.போஜன், உதகை சட்டமன்ற உறுப்பினர் கணேஷ், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் கோத்தகிரி ஒன்றியச் செயலாளர் நெல்லை கண்ணன் பொதுக்குழு உறுப்பினர்கள் வீரபத்திரன், செல்வம், காளிதாசன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சந்திப், கோத்தகிரி ஒன்றிய துணைச் செயலாளர் ஸ்டுடியோ செல்வம், இளைஞர் அணி நிர்வாகிகள் மணி சுரேஷ், சுமான், முன்னாள் கிளைக் கழகச் செயலாளர் சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் பல கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

‘நான் முதல்வன் திட்டம்’ ஏழை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்’

## மும்பை ஐ.ஐ.டி.யில் படிக்கப் போகும் மாற்றுத் திறனாளி மாணவி!

### முதல்வருக்கு நன்றி தெரிவித்து காணொலிப் பதிவு!

விருதுநகர், ஜுன் 17-

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே உள்ள அரசு மேல் நிலைப் பள்ளி மாற்றுத் திறனாளி மாணவி, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் மும்பை ஐ.ஐ.டி.யில் படிக்க வாய்பபு பெற்றிருக்கிறார். அதற்கு முதல்வருக்கு நன்றி தெரிவித்து மாணவியின் காணொளிப் பதிவு ஒன்று சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது.





இப்பதிவில் இம்மாணவி கூறியிருப்பதாவது:-

என் பெயர் யோகேஸ்வரி. நான் விருது நகர் மாவட்டத்தில் சாத்தூர் அருகில் படந்தாள் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறேன். எனக்கு மும்பை ஐ.ஐ.டி.யில் ‘ஏரோஸ்பேஸ்’ பொறியியல் படிப்பு கிடைத்துள்ளது இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

எனது அம்மா பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்கிறார். அப்பா டீ கடையில் வேலை பார்க்கிறார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் அவர்கள், ‘நான் முதல்வரின்’ திட்டம் குறித்து எடுத்துக் கூறி அதில் பங்கேற்கும்படி கூறினார்கள். அதனால் இத்திட்டத்தில் இணைந்தேன். மாவட்ட ஆட்சியர் அவர்கள் எந்த நுழைவுத் தேர்வு எழுதினால் கல்லூரிகளுக்கு செல்லலாம், எந்தெந்த உயர் கல்விக்கு செல்லலாம் என்று சொன்னார்கள். அதன் மூலம் எனக்கு ஜே.இ.இ. மெயின் தேர்வுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே பதிவு செய்தார்கள். பதிவு செய்தது டன் இத்தேர்வை எப்படி எழுத வேண்டும். எப்படியெல்லாம் கேள்வித் தாள்கள் இருக்கும் என்றெல்லாம் சொல்லித் தந்தார்கள்.

இத்தேர்விலும் வெற்றி பெற்றேன். மேலும் ஜே.இ.இ. அட்வான்ஸ் பயிற்சிக்கு ஈரோட்டிற்கு 40 நாட்கள் கூட்டிச் சென்றார்கள். அதிலேயும் நான் இணைந்தேன். அத்தேர்விலும் நான் வெற்றி பெற்றேன். மேலும் கவுன்சிலிங் குறித்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே சொல்லிக் கொடுத்தார்கள்.

இதற்கெல்லாம் நெடுஞ்செழியன் சார் அவர்கள், எனக்கு மிகவும் உதவி செய்தார்கள். அவருக்கு இந்நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ‘நான் முதல்வர்’ திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மிக்க நன்றி. ‘நான் முதல்வன்’ திட்டம் என்பது ஏழை எளிய மாணவர்களுக்கு ஒரு வரப் பிரசாதம் என்றே சொல்லலாம். எங்களைப் போன்ற ஏழை மாணவர்களுக்கு இத்திட்டம் மிகவும் உதவியாக இருக்கிறது. இத்திட்டத்தை கொண்டு வந்த முதல்வர் அவர்களுக்கு மிக்க நன்றி.

இத்திட்டத்தில் என்னை பங்கேற்க செய்த விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் அவர்களுக்கு மிக்க நன்றி. உயர் கல்விக்கான எல்லா செலவுகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ள மாவட்ட ஆட்சியருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஊடகங்களில் வெளியான செய்தி!

## ஜாக்டோ - ஜியோ மறுப்பு!

### மாநில ஒருங்கிணைப்பாளர்கள் அறிக்கை!

சென்னை, ஜுன் 17-

ஜாக்டோ - ஜியோ சார்பில் கடந்த 13.06.2025 அன்று நடிகரும், அரசியல் கட்சித்தலைவருமான விஜய் சந்தித்ததாக வெளியான ஊடகச்செய்திக்கு ஜாக்டோ- ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் சார்பாக மறுப்பு தெரிவித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 13.06.2025 அன்று நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் அவர்களை தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் நிறுவனத் தலைவர் மாயவன் சந்தித்து அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகள் சம்பந்தமாக பேசிய செய்தி என்பது ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் சந்தித்துப்பேசியதாக பல்வேறு ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திக்கு ஜாக்டோ-ஜியோ சார்பில் மறுப்பைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜாக்டோ - ஜியோ அமைப்பு தமிழ்நாட்டில் அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர்களின் கோரிக்கைகளுக்காக கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து போராடி வருகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பேரமைப்பாகும். அப்படிப்பட்ட கோரிக்கைகளுக்காக எந்த ஆட்சியாக இருந்தாலும் சமரசமற்ற முறையில் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி ஊதிய மாற்றம், பறிக்கப்பட்ட உரிமைகள் மீளப் பெறப்பட்டது உள்ளிட்ட கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளது. இன்றைக்கும் பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக ஒன்றிய, மாநில அரசுகளிடம் தொடர்ந்து போராடி வருகிறது.

இன்றைக்கும் தமிழ்நாடு அரசிடம் ஜாக்டோ-ஜியோ சார்பாக தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியும், பல்வேறு கட்ட போராட்ட நடவடிக்கைகள் விளைவாகவும் அரசிடமிருந்து சரண்டர், மகப்பேறு விடுப்பு பணிவரன்முறைக்கு சேர்ப்பது உள்ளிட்ட 9 கோரிக்கைகள் பெற்றுள்ளோம். மேலும், பழைய ஓய்வூதியத்திற்காக அமைக்கப்பட்ட குழு அறிக்கை 30.09.2025-க்குள் பெறப்படும் என உத்திரவாதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அரசிடமிருந்து நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்த்து தற்காலிகமாக இயக்க நடவடிக்கைகளை ஒத்திவைத்துள்ளோம்.

ஜாக்டோ-ஜியோ பேரமைப்பு அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர் அமைப்புகள் சார்பாக பல்வேறு சங்கங்கள் கொண்ட கூட்டமைப்பாகும். இதில் பங்கேற்றுள்ள அந்தந்த சங்கங்களின் மாநில அமைப்புகளின் முடிவுகளுக்கேற்ப தனித்துவமாக செயல்படுவது அந்தந்த சங்கங்களின் தனிப்பட்ட முடிவாகும். அதற்கும் ஜாக்டோ-ஜியோவிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

எனவே, ஜாக்டோ-ஜியோ சார்பாக மேற்கண்ட நடிகர் மற்றும் சங்கத் தலைவர் சந்தித்ததாக வெளியான தகவல் முற்றிலும் உண்மைக்குப்புறம்பானது. அதற்கும் ஜாக்டோ-ஜியோவிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். எனவே, பத்திரிக்கைகளில் இச்செய்தியை திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.